விலை அணா 1½

முரசொலி

முரசு 1 | திருவாரூர் பெரியார் ஆண்டு 69 (20—6—48) ஞாயிற்றுக்கிழமை | ஒலி 18

போகிறான்; போகிறான்.........!

கூரிய முட்கள் கைகளைக் கீறிடினும் மலர் கொய்யத் தாவும் குமரியின கரங்கள்.

மூச்சை நிறுத்திவிடும் பயங்கர அலைகள் இருப்பினும் முத்தெடுக்க நினைக்கும் மனித உள்ளம்.

பாறைகள் இடிந்து உடலை நசுக்கிவிடும், என்பதறிந்தும் பொன்னெடுக்க சுரங்கம் தோண்டும் மானிட ஜாதி.

மலரும்-முத்தும்-பொன்னும் இலட்சியங்களாகின்றன. முள்ளும்-கடலும்-பாறையும் இடையூறுகளாகின்றன. இடையூறுகளுக்கு அஞ்சாதபண்பு கொண்டவன் இலட்சியப் பாதையை நோக்கி நடந்தபடியிருக்கிறான்.

அந்த இலட்சிய வீரன் எதற்கும் கலங்காத காளை.

'இடுக்கண் வருங்கால் நகுக' இந்தக்குறள் அவன் மூச்சு.

'இலட்சியமே என் உயிர்' இது அவன் பேச்சு.

கொடுமைகள் கோர நர்த்தனை செய்யும்போதும் அவன் குதூகலமாகத்தான் தன் பயணத்தை நடத்துவான்.

தன் எதிரே தனக்குத் தடையாக நிற்கும் மனிதர்களை அவன் மாமிச மலையென்றான். நசுங்கிப் போன ஈயச் செம்பே! என நையாண்டி செய்வான்.

“என்னை இப்படிப்பேசச் சொல்வது இதயத்தில் பீறிடும் இறுமாப்பல்ல! உன் கண்களிலே தாண்டவமாடுகிறதே .. அந்த கோரம்! உன் உதடுகளின் இடுக்கில் வழிகிறதே அந்த அலட்சியம்! உன் உள்ளத்தில் பொங்குகிறதே அந்த நஞ்சுக் குழம்பு! இவைதான் என்னை அமைதியிழக்கச் செய்கின்றன” என்று தன் ஆத்திரத்திற்கு விளக்கம் கூறுவான்.

அவன் புகழுக்காக ஆசைப்பட்டு பொதுநலப்பணியில் குதிக்கவில்லை. அவனுக்குத் தெரியும் அந்த வேலை சருக்குமரம் ஏறும் கதை யென்று! அவனறிவான் பொதுப்பணி— குமுறிவரும் வெள்ளப் பெருக்கில் எதிர் நீச்சல் போடும்செயல் என்று! எதிர் இயக்கத்தார் ஏவுகிற கணைகள் சொந்த இயக்கத்தார் சொருகுகிறகட்டிகள்-இவைகளை எதிர் பார்த்தே அந்த இலட்சியக்காரன் களத்தில் உலவுகிறான்.

பாசிபிடித்த ரத்தக்குட்டைகளாக-உளுத்துப்போன எலும்புக்கூண்டுகளாக-செல் மொய்த்த நரம்புக் கூடுகளாக மக்கள் வாழ்வது அவனுக்குப் பொறுக்க முடியவில்லை.

வாழ்வதற்குப் பகையாக இருக்கும் அத்தனை சக்திகளையும் அவன் நேர் நின்று தாக்குகிறான். மகாத்மாக்கள் போற்றி வந்த மதமா? மரவுரி தரித்த நாள் முதல் வணங்கி வந்த கடவுளா? மதத்தின் தலைவர்களா? கடவுளின் பிரதிநிதிக்ளா? அத்தனையும் அவன் சிந்தனைப்பட்டறையில் தூள்! தூள்!

சமுதாய துரோகிகள், சுயநல பெருச்சாளிகள், இலட்சிய முத்திரை குத்திக்கொண்டு இழி தொழிலில் ஈடு படுவோர், பரிகசிப்போர், பின்னிருந்து பேசுவோர், உறுமுவோர், உதைப்பேன் என்போர்; இந்த பட்டியல் அவன் உறுதியின் முன்னே எரிந்து கருகும்.

“பார்! பார்!............பசலைப் பயலே! உன் செல்வாக்கை செல்

(12-ம் பக்கம் பார்க்க)

மாத மிருமுறை

ஆசிரியர்: மு. கருணாநிதி

இரத்தக் கண்ணீர்

தொடர் கதை

மு. கருணாநிதி

ஓடிய கதை.

ஞானச்சார்யா சமண பௌத்தமதத்தின் வைரி. அனுசாரனையாக அரசிளங்குமரன் வைரமுடியை பயன்படுத்துகிறான். சமண பௌத்தர் கொடுமை அனுபவிக்கின்றனர். பௌத்தன் பொன்னழகனை சிறைப்படுத்த முயல்கிறார். இடையே பொன்னழகனுக்கும் இளவரசி வேல்விழிக்கும் காதல் ஏற்படுகிறது. காதலின் உதயத்திலேயே....? கலைக்கூடத்தில் சந்திக்கின்றனர் காதலர். திடீரென ஓசை. திடுக்கிட்டுத் திரும்புகின்றனர்......அங்கே...

(4)

ஞானச்சார்யா வெகு வேகமாகப் பிரவேசித்தார். பக்கத்திலே சாமரம் வீசியபடி இரு சாச சுந்தரிகள் தொடர்ந்தனர். அவரது பொற்பாதங்கள் வலியெடுக்குமோ என்று கவலைவாட்டியபடி சில சிப்பாய்கள் காலைத்தொட்டுக்கொண்டு நின்றனர்.

உரத்தகுரலில் "பொன்னழகா" என அதட்டிக் கூப்பிட்டார். வாயை மூடுவதற்குள் அவனருகில் நின்றுகொண்டிருந்த வேல்விழி அவர் கழுகுக் கண்களில் பட்டாள்.

மான்குட்டிகள் மகிழ்ச்சியின் எல்லை தாண்டும் நேரத்தில் புலியின் பார்வைக்கு இலக்கானால்?

வெண்புறுக்கள் வீணையும் நாதமுமாய் ஆகிவிடும் வேளையில் வேடனின் வில் முன்னே எதிர்ப்பட்டால்?

கொஞ்சும் பஞ்சவர்ணக் கிளிகள் வஞ்சகப்பூனையிடம் சிக்கிக்கொண்டால்? வேல்விழியின் நெஞ்சத் துடிப்புகள் இந்தக் கேள்விகளாக மாறின.

பொன்னழகன கண்களில் ஒரு சர்வசாதாரண அலட்சியம் அவன் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிற்று புழுவைப் புலியென்கிறாய்.... பூச்சியைப் பூனையென்கிறாய் ..... பொன்னழகன் பேசாமல் தணிந்து நின்றான்.

ஞானச்சார்யாவின் போதையேறிய சிவந்த கண்கள் வேல்விழியை வெட்டி சாப்பிடுவது போல உருண்டன. சிரித்தார். இருமுறை சிரித்தார்; ஒருமுறை ஏளனமாக! மறுமுறை ஆத்திரமாக!.........

இளவரசிக்கு நெஞ்சு நடுக்கமெடுத்தது. பஞ்சமா பாதகத்தின் உறைவிடமான ஆச்சார்யா தன் காதலுக்கு படுகுழி வெட்டுவதோடு நிற்கமாட்டாரே-இப்போதுதான் என் இதயமேறிக் கொண்ட இந்த எழில் முகத்தானை எரிகின்ற தீயில் போடுவாரே.....அண்ணா வைரமுடி தன்மேல் வைத்துள்ள தணியாத அன்புக்கு தகனகிரியை நடத்திவிடுவாரோ..என்று விம்மினாள். வாய்விட்டு ஏதாவது கத்திவிடாவிட்டால் அவள் இதயம் வெடித்துவிடும் போலாகிவிட்டது.

"ஏன் விழிக்கிறீர்கள்!" மூன்றாவது முறையாக சிரித்தார் ஆச்சார்யா. அந்த சிரிப்போடு அவரது இறுமாப்பான பார்வை உடைந்து கிடந்த சிலையின்மேல் பாய்ந்தது.

"...ஓகோ! சிற்பிக்கு சித்தம் சரியில்லை போலும் சிலையை உடைத்திருக்கிறார்.

இல்லை!, அப்படியிருக்காது ....இளவரசியோடு நடத்திய கண்ணாமூச்சு வேடிக்கையால்.... இந்தச் சிலைக்கு ஆபத்தாயிருக்கும்.... அப்படித்தானே!"

வேல்விழி ஏதோ புதிதாகக் கண்டுபிடித்தவள் போல...முகத்தில் உற்சாகத்தை ஏற்றிக்கொண்டு "குருஸ்வாமி! வீண் பழி வேண்டாம் இந்த சிலையை உடைப்பதற்காகவே நான் இங்கு வந்தேன். இது சேரன் செங்குட்டுவன் சிலை."

"யார்? ..சேரன் சிலையா?... பாண்டிய நாட்டிலா? .....துரோகம், பெரிய ராஜத்துரோகம். எவ்வளவு பெரிய நெஞ்சத் துணிவு!"

அந்தத் துணிவைத் தூண்டிக் கத்தான் இங்கு வந்தேன்."

"பேஷ்! இளவரசீ உன் தேச பக்தியை மெச்சுகிறேன், பாண்டியநாட்டு புழு பூச்சிகளுக்குக் கூட தேசாபிமானம் உண்டு. இந்த புத்த சமணப்பயல்களுக்கு அது அறவே கிடையாது"

பொன்னழகனால் இனியும் பேசாமலிருக்க முடியவில்லை. இளவரசி தங்கள் காதல் வெளிப்படாதிருப்பதற்காக கையாண்ட தந்திரம் ஒரு வகையில் நலமாய் முடிந்தாலும் ..பாண்டிய நாட்டில் சேரன் சிலையை செய்தான் என்ற குற்றஞ் சாட்டப்பட்டு கூண்டில் போடுவார்கள் என்ற எண்ணம் அவன் மனதில் பளிச்சிட்டது. ஆனாலும் பயப்படாமல் பேசினான்.

"ஆச்சாரியாரே! உமது தேசாபிமானத்திற்கு எனக்கு அர்த்தம் தெரியும். வேற்று நாட்டுக்காரனை

(11-ம் பக்கம் பார்க்க)

புதுமைக் காதலர்கள்!

காந்தை என். எஸ். சண்முகவடிவேல்

மேல் திசையிலே தங்கத்தை வார்த்து ஊற்றியது போன்ற சிவந்த பொன்னிற வானம். இதை அழகு செய்துகொண்டும், பேரொலி முழங்கிக் கொண்டுமிருந்த நீலக்கடல், மாலைக் கதிர்களை தன்னிடமிருந்து மேல் வானத்தில் பரப்பிக் கொண்டிருந்தது.

தோகையை விரித்து அழகு நடனம் புரியும் மயில் போல அதன் அலைகள், நீண்ட தூரத்திலிருந்து என்னிடம் என் உயரத்துக்கு வளர்ந்து வருவதும், போவதுமாக இருந்தது. 'ஜிலு ஜிலு' வென்ற தென்றல் காற்று இவை அனைத்தும் என்னை மயக்கி ஓரிடத்திலேயே நிற்கச் செய்துவிட்டன. இல்லை அலைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். "டான்..டான்..." என மணியோசை கேட்க "சார்! மணியடித்து விட்டான வண்டி புறப்படும் நேரம் வாருங்கள!" பியூன் தட்சணா சத்தம் கேட்டுத் திரும்பினேன் "அடே! நேரமாச்சே!" என்று வேகமாக ஓடி, வண்டியில் ஒரு 'காரேஜ்' கதவைத் திறந்து தாவி, மறுபக்கம் இறங்கி எனது "தபால்வேனை" அடைய விரைந்தேன்.

கதவை தாளிடும்போது மற்றோர் கரம் என் கையுடன் மோதிற்று. நிமிர்ந்து பார்த்தேன் 'சட்' என தலையை கீழே கவிழ்ந்துகொண்டது அந்த உருவம். கையை 'விருட்'டென உள்ளுக் கிழுத்துக் கொண்டது. வளையல்கள் உராய்வதால் ஜலதரங்கம் போல் இசை பொழிந்தது. சிறிது திகைத்து நின்றுவிட்டேன்.

இதற்குள் தட்சணா "என்ன சார் வேடிக்கை! அய்யா கோபித்துக் கொள்வார்கள். வாருங்கள் போலாம்......" என முடிப்பதற்குள் "இதோ என பரபரப்புடன் வந்துவிட்டேன்" தொடர்ந்து 'தபால் வண்டி'யில் ஏறி கதவை தாளிட்டுக்கொண்டேன்.

கதவை மூடவே வண்டியும் "குப்..குப்..." என்ற சத்தத்துடன் கிளம்பிற்று. எனக்கு இருக்கை கொள்ளவில்லை. முதலில் உள்ளம் வெளியே குதித்தது பின் கண்கள் மூன்றும் 'கேரேஜி'ல் உள்ள மான் விழியாள் மேல் தாவிற்று. அது போது மட்டும் ஓவியன் இருந்தால் நல்ல 'போஸ்' எங்களிடையே கிடைத்திருக்கும். என் எத்தனை கவிஞர்கள் கற்பனை வராமல் தசாத்து செய்கிறார்கள்? அவர்கள் எங்களைப் பார்த்திருந்தால் 'இரு பெட்டியில் இரு உள்ளங்கள்...' என கவிபாட ஆரம்பித்திருப்பார்கள்.

"ஆஹா!... அவளது கரம் வெளியே தெரிவதே இவ்வளவு அழகாய் இருக்கிறதே! த்து. த்து விழி குவளை மலர்போலல்லவா இருக்கின்றது ...... இல்லை! இல்லை! இணை மலர்ந்த அடுக்குமல்லி. சே..சே! அதுவுமல்ல...தாமரைக் கண்ணிதான்! புருவம் வானவில்தான். முகம் சந்திர பிம்பம்தான்! ஆமாம். அழகின் சிகரமேதான் அவள் ......! ஆம்.... நீரோ மன்னன் கண்டு, அணைத்து சுவைத்துப் பார்த்த பாப்பேயாவே தான் இவள். என் உள்ளம் என்ற நீல வானத்தில் நீந்தி விளையாடும் நிலவாகிவிட்டாள்..." என்று எண்ணியபடி "என் உலகில் தானே சஞ்சரிக்க வேண்டும்...'!' என்று என்னை அறியாமல் சொல்லிவிட்டேன் நல்லவேளை யார் காதிலும் விழவில்லை.

அவளும் என்னை பார்த்துக் கொண்டேதானிருந்தாள். இடையிடையே தென்றல் குறும்பால் கலையும் தன் முக்காட்டை சரிபடுத்திக் கொண்டிருந்தாள். நான் தென்றலுக்கு வாழ்த்தும் பாடினேன். சூறாவளிமட்டும் வந்திருந்தால் அவள் முக்காடு மட்டுமா .....! ஆஹா! அவள் அழகையே அது காட்டாமலா இருந்திருக்கும்? மலர் புதருக்குள் மலர்ந்தாற் போல் இருந்தாள் அப்பாவை.

இதற்குள் ஆபீசர் "என்ன கருணா! வேலையை பார்......... எதையோ பார்த்தண்டு நிற்கிறாயே?" என்ற அதிகாரக் குரல் கேட்கவே, என் மனக்கோட்டையை தகர்த்து, தபால்களை பிரித்து ஒவ்வொரு அறையிலும் போட ஆரம்பித்தேன். ஆனால் என்ன அலைகள் மட்டும் ஏதோ ஓர் தீவில் போய மோதிக்கொண்டிருந்தன. தபால்களை அங்கும் இங்கும் தூக்கிப் போட்டேன். 'காதல்' என்ற ஓர் அழகிய வண்ணச்சித்திரம் அமைந்த புத்தகம், என் கண்ணில் பட்டது.

அதன் அட்டைப் படம் உள்ளத்திற்குக் குளிர்ச்சியை அளித்தது. "நன்கு அடர்ந்து, கவிழ்ந்த பெரும் ஆலமரம், கீழே பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற புற்றரை வெள்ளியை உருக்கி வார்த்தாற்போன்ற நல்ல நிலவு மாதத்தின் அடியில் விழுதை தலையணையாகக் கொண்டு படுத்திருக்கும் கட்டிளங்காளை. பக்கத்தில் ஓர் தங்கப்பதுமை. இந்த காட்சி வேறு எனது உள்ளத்தைக்கிளறி விரகதாபத்தை

தூண்டி விட்டது. சமாளித்துக் கொண்டுவேலையை தொடங்கினேன். ஆயினும் உண்மை பிம்பமும்,செயற்கை பிம்பமும் தோன்றித் தோன்றி மின்னலென மறைந்தன.

இதற்குள் புகைவண்டி 'தட...தட......' என்ற ஓசையுடன் ஆரூர் ஜங்ஷன் வந்து நின்றது. நான் ஆபீசரிடம் காப்பி சாப்பிட்டு வருவதாகச் சொல்லி இறங்கி அவ்வணங்கு இருக்கும் 'பெட்டி'பக்கம் நடக்கலானேன். காப்பியை குடித்துவிட்டு ஒரு 'வில்ஸ்' சிகரெட்டையும் பிடித்து உறிஞ்சிக்கொண்டு சற்று 'பிளாட்பாரத்தில்' உலவலானேன்.

அம்மான் விழியாள் தனது கரங்களால் முக்காடை சிறிது விலக்கிப் பார்ப்பதும்.....புன்னகை அரும்புவதுமாக இருந்தாள். மனதை சற்று தைரியப்படுத்திக்கொண்டு நெருங்கினேன். 'சிகரெட்' கைக்கும் வாய்க்கும் மளமளவென மாறிக்கொண்டிருந்தது. காரணம் யாதோ? நானறியேன்.

நான் "வண்டி புறப்பட நேரமாகும் போலிருக்கு—மாயவரம் வண்டியைக் காணோம்." இழுத்தாற்போல் தானே பேசிக்கொண்டேன். "ரொம்ப நேரமாகுங்களா?" என்ற குரல் கேட்டு திரும்பினேன். அவள் உதிர்த்த முத்துக்கள் என தெரிந்தது. அதிகம் நேரமாகாது......அரை மணிதான் முன்பின் இருக்கும்" என உள்ளத்தை சற்று தேற்றிக்கொண்டே இருந்தேன். "அப்படின்னா தஞ்சை எத்தனைக்கு போவுங்க?" என்ற கேள்வி பிறககவே "எட்டு மணிக்கு சேர்ந்துவிடும்" என்ற வைரச்சொற்களை சேர்த்து சமாதானம் கூறினேன்.

அதுபோது ஒரு பழத்தட்டுக்காரன் "ஆரஞ்சு... திராக்ஷை" என கூவிக்கொண்டு வந்தான். "பழக்காரனே இப்படி கூப்பிடுங்க!" என்றாள் அம்மங்கை என்னிடம் சொன்னதை கேட்ட அவன் திரும்பினான் "இறக்கப்பா!" என்றேன். அவன் சில ஆரஞ்சு, திராக்ஷைகளை எடுத்து அவளிடம் காண்பித்தான். நான் எதையும் யோசியாமல் "கிரயம் எவ்வளவு?" என்றதும் "பதினொண்ணு" என்றது அவன் பதில். "பத்துரூபாய் நோட்டுக்கு சில்லறை இருக்கா..." என அவள் கேட்டு முடிப்பதற்குள், நான் ஒரு ரூபாயை சனியாக அவன் கைமேல் போட்டேன். இதற்குள் மணியும் அடித்தது. "நான் தஞ்சையில் சந்திக்கின்றேன்" என்று கூறி விரைந்து சென்று தபால் வண்டியில் ஏறிக்கொண்டேன்.

வண்டி நகர்ந்தது. என் உள்ளம் "சரி.....! திராக்ஷை சுவையுள்ளதாக இருந்திருக்குமா? நான் ருசிபார்த்து கொடுத்திருக்கலாம்! விரும்புவாளோ, என்னமோ! நன்றாக இல்லாவிட்டால் என்ன நினைப்பாள்? இம்..! தஞ்சையில் எப்படி பேசுவது...." என பலவாறாக அல்லற்பட்டது. தஞ்சை அடையவே 'வருகின்றேன் சார்!' என சொல்லிக் கொண்டே அவள் பக்கம் 'விர்' என நடந்தேன். தபால் வண்டியை விட்டு இறங்கும்போது 'என், கருணா இவ்வளவு அவசரமாக போகிறான்?' என்ற ஆபீசர் சொன்னது காதில் விழுந்தது இருந்தாலும் நான் கவலைப்படவில்லை.

நான் அவளிடம் வந்ததும், "ஏங்க, நான் வரட்டுமா?" என கேட்டு எதற்கோ தயங்கினாள். நான் அதற்குள் "ஏன், தாங்கள் போகவேண்டிய இடம் கொண்டு வந்துவிட்டுப் போகிறேன்..." என இழுத்தாற்போல் சொன்னேன்.

"உங்களுக்கு ஏன் அந்த சிரமம்?..." என்றாள்.

"பரவாயில்லை...மனிதர்களுக்குள் இந்த உதவிகூட செய்யாவிட்டால்......" என்றேன்.

"சரி போகலாம்......" என கூறி 'மடமட'வென நடந்தாள்.

நான் "சுறக்கே போகலாமே!" என்றதும் "சரி" என என்னுடன் தொடர்ந்தாள்.

அவளை கரிய இருள்படர்ந்த ரயிலவே லேனைத் தாண்டி அழைத்து வந்தேன். வழியில் சில வார்த்தைகள் பரிமாறிக்கொண்டோம் இதோ அவை.

நான் "உங்கள் ஊர் எது?" என்றேன்.

"எனக்கு நாகைப்பட்டணம் —" என மெல்லிய குரலில் சொன்னாள்.

"இங்கே யார் வீட்டுக்குப் போகிறீர்கள்?"

"சொந்தக்காரர் வீடு இருக்கின்றது... .."

"உங்கள் கணவருக்கு என்ன வேலை......?"

"கணவனை தேடியதால் தான் தஞ்சை வந்தேன்" என சற்று கனத்த குரலில் சொன்னாள்.

'மணமாகவில்லையோ?"

"ஆமாம்! பெற்றோர்கள் சினந்துகொண்டார்கள். எதிர் வீட்டு ஜெயபாலனுடன் பேசியதற்காக" என ஆத்திரமாகவே கூறினாள்.

'நீங்கள் கோஷாவாயிற்று. பிறருடன்......"

"பேசக்கூடாதென்ற இந்த பாழும் மதத்தில்தான். அவர் என்கூட சிறுபிள்ளைமுதல் படித்தவர். நல்ல குணம். இதில் என்ன தவறு?" என்றாள்.

"இருந்தாலும் கட்டுப்பாடு என்று இருக்கும்போது......" என இழுத்தேன்.

ஆமாம்! மண்ணாங்கட்டி கட்டுப்பாடு. போங்க, வடநாட்டிலேயே எங்கள் மத பெண்களுக்கு சம உரிமை கொடுத்து கோஷாவை நீக்கிவிட்டார்கள் ...." என சஞ்சலத்துடன் கூறினாள்.

"அது கற்பைக்காக்க அரணாகஉள்ளது. அதனால்தான் பெரியவர்கள்........"

"ஆ! உண்மைதான். ஆணைப்போல உங்களிடம் பழக. அது கற்பனை, வீண் கனவு. முன்னோர் மூடக்கொள்கையில் இதுவொன்று........." என ஆத்திரமாக பேசினாள்.

"வேண்டாம். கோபத்தில் இப்படித்தான் சொல்வீர்கள்... பின்......!'

'பின் என்ன, நான் இனி சமூகத்துக்கு கட்டுப்பட்டவளல்ல. என்னை இப்போது யாரும் தடுக்க முடியாது." என கூறிக்கொண்டே வந்தாள். அதுபோது அவள் முதானை காற்றில் மிதந்து என் வதனத்தை தொட்டுப்பார்த்துச் சென்றது.

'உன் பெயர்..."என்றேன்.

"மெக்கா பீபி என்றாள்"

"சரி, இவ்வளவு இளமையுடன் வெளியே கிளம்பலாமோ? என்றேன்.

"நான் ஒன்றும் தனியாக இல்லை இந்தா காவலர் கிடைத்துவிட்டார்..." என என்னை சுட்டிக் காண்பித்தாள்.

"நல்ல.. வேளை......'காதலர்' என்பதுபோல் காதில் கேட்டது" என பெருமூச்சுடன் அவளை ஓர் ஒருமுறை பார்த்தேன். அவளது உருவம் என் விழியிலே தாவிக்குதித்து நெஞ்சிலே நின்று நர்த்தனம புரிந்தது! நிலவொளி பெரிதும் சிறிதுமாக மரத்தினிடையே எங்கள்மீது பட்டுக்கொண்டிருந்தது.

நான் உள்ளத்தை தைரியப் படுத்திக்கொண்டு "நான் உன்னை காதலிக்........" என பிரேமையும், பயமும் கலந்த குரலில் சொன்னேன்.

"இஷ்டந்தான், முடியுமா?... சம்மதம்தான், ஆனால் சரியாகுமா?" என்று கேட்பதுபோல் என்னை தன் கருவிழிகளை நிலவொளியில் பிரகாசிக்க விட்டுக் கொண்டு பார்த்தாள்.

"என் இச்சையை நிறைவேற்று..." எனறேன்.

"ஆகட்டும்!..." என்றாள்

துவண்டு அவள்மேல் விழப்போனேன். "வேண்டாம்! யாராவது வந்துவிட்டால்....பின்...." என எச்சரித்தாள். பின் இருவரும் இரு மருங்கும் அடர்ந்த மரங்கள் உள்ள ஓர் சாலைபோய் சேர்ந்தோம். எனக்கு ஓர் யோசனை தோன்றிறறு. நான் "சற்று இந்த மரத்தடியில நில், ஒரு வினாடியில என் நண்பனை அடுத்த வீதியில் கண்டு ஓர் செய்தி சொல்லி வருகின்றேன்......" என்றுகூறி, அவள் பதிலுக்குக் கூட காத்திருக்காமல் மின்னல் போல மறைநதேன். கால்கள் விரைந்துதான் நடந்தன, ஆனால் நண்பன் வீடு அடையவில்லை. இதற்குள் எனது எண்ண அலைகள் எங்களூரில உள்ள ஒவ்வொரு ஹோட்டல் அறையையும் பார்வையிட்டு வந்தன.

* * *

"சுந்தரம்! சுந்தரம்!!" என்ற குரல் நான் இருக்கும் அறைக் கதவில் மோதிற்று. எழுந்து 'பட்' என கதவைத் திறந்தேன். தெரு விளக்கில் கருணா தெரிந்தான். எதும் பேசவில்லை எங்கு வந்தாய் இந்நேரத்தில்? என்றேன்.

"ஒண்ணுமில்லே..." என கருணா இழுத்தான்.

"சரி அப்படின்னா இப்படி உட்கார், நீ நேற்று கேட்டாயே 'ஆரியமாயை' அதைப் படிக்கிறேன் கேள......" என்றேன்.

"ஆமாம், உனக்கு இதைத் தவிர வேறு வேலை என்ன......? சுந்தரம்! வந்து ..ஒரு சேதி... ......!" என கூறி நகைத்தான்.

"சொல்லித் தொலையேம்பா ....!" என சலிப்போடு கேட்டேன்.

"கோபித்துக் கொள்ளாதே நண்பா! மலராது ஒரு மொக்கு மணம் மட்டும் வீசுகின்றது. ஆனால் அதை மலரசெய்ய!

"கதிரவன் கிரணம் தேவையோ?" என்றேன்.

"நீ ஓர் முட்டாள், அவ்வளவு முரடன் தேவையில்லை...மாலைத் தென்றல்தான் தேவை......"

"அதுவா!......தேடிப்பார்க்கலாம்... சேதியைச் சொல் பீடிகை போதும்,"

"ஓர் இள மங்கை...! வயது பதினாறேதான் ..! மேனி தங்கம் தான்...! ஆஹா அவள் அழகை வர்ணிக்க கவிதான் வேண்டும்." என அளந்துகொண்டே போனான்.

"அடடா..............! அதற்கென்ன, விஷயத்தை சுருக்கச் சொல்லப்பா......" என துடித்தேன்.

(8-ம் பக்கம் பார்க்க)

முரசொலி

பெரியார் ஆண்டு 69,
ஆனி 7 ஞாயிறு
(20—6—48)

ஜூலை 1

இந்திய அரசியல் உலகிலே—குறிப்பாக ஆட்சிபீடத்திலுள்ளவர் உலவும் வட்டாரங்களிலே, பலம் பொருந்திய மத்ய சர்க்கார் தேவை என்ற குரல் சில காலமாக கிளம்புகிறது. "மாகாண உணர்ச்சி, பேதத்தை, பிளவை, வேற்றுமையை அதிகரிக்கச் செய்யும் நச்சுக் கொள்கை, அந்தக்கொள்கை இந்தியாவில் பரவினால், இந்திய சமுதாயம் பலம் பொருந்திய அமைப்பாக இல்லாமல் சின்னா பின்னமாக சிதறிவிட வழிவகை செய்துவிடும். ஆகவே, தேசபக்தர்களே தியாகிகளே, பாரத மாதாவின் புத்ரர்களே, மாகாண உணர்ச்சியை வளர்க்காதீர்கள்; வளர்ந்தாலும் தடைப்படுத்துங்கள்" என்பதாக அரசியல் பண்டிதர், இந்தியாவின் முதல்வர், கோவையிலே, டில்லியிலே, பேசினார். அன்பர் ஆச்சாரியாரோ, அந்த உணர்ச்சி இப்போது வேண்டாம் என்று இதோபதேசம் புரிகிறார். ஆகஸ்டில் சுதந்தர சூரியன் உதித்தான். ஆண்டு ஒன்றாகப் போகிறது. அதற்குள் இந்தப் பிரிவினை மனப்பான்மை கூடாதுதான் என்று விரிந்த பரந்த மனப்பான்மையினர் விவேகசிந்தாமணிபடிக்கின்றனர்.

பொருளாதார நிலை சரிந்துவிடும் போலிருக்கிறது. எங்கு பார்த்தாலும் பசி, பட்டினி, பஞ்சம் என்ற கூக்குரலே, வேதனையில் விளைந்த விம்மலே, கேட்கிறது. எல்லாருக்கும் உணவு, உடை வேண்டுமானால், மாகாண உணர்ச்சியை விட்டு பலம் மிக்க மத்யசர்க்காருக்குப் "பாடுபடுங்கள் என்பதாக சமத்தத் தமிழன், கெட்டிக்கார நிதி மந்திரி" என்றெல்லாம் "வசிஷ்டர் வாயால் ரிஷிபட்டம்பெற்ற" சண்முகம்செட்டியார் அடிக்கடி வலியுறுத்துகிறார்.

ஏன் இவ்வளவு பேரும் அதிக அக்கறை கொண்டு மத்திய சர்க்காரைக் காப்பாற்ற கச்சைவரிந்து கட்டுகின்றனர்? என்ன காரணத்தால் பாரத மாதாவைக் கிழக்கிலும் மேற்கிலும் பறிகொடுத்தபிறகு, பாரதமாதா சேவை செய்கின்றனர்?

சுதந்தரம் வந்தது. வந்த சுதந்தரம் எந்த அளவுக்கு மக்களுக்குப் பயன் படுகிறது? மத்யசர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்கும் உள்ள ஒத்துழைப்பு எவ்வளவு தூரம் உரம் பெற்றிருக்கிறது என்பதை யோசித்தால், நமக்கு ஓரளவுக்கு உண்மை புரியாமலில்லை.

ஆந்திர மாகாணம் வேண்டுமென்ற கிளர்ச்சி; கர்னாடகம் கேட்கிறார்கள்; கேரளமும் தமிழ் நாடும் அப்படியே. பீஹாரில் சில பகுதிகளை வங்காளம் கோருகிறது. பம்பாயில் சிலபகுதிகளை மகாராஷ்ட்ர மாக்கவேண்டுமென்ற கோரிக்கை நல்ல முறையில் வளர்ந்து வருகிறது. அஸ்ஸாம் மாகாண மக்கள் மத்யசர்க்காரிடம் அதிருப்தி கொள்கின்றனர். மாற்றாந்தாய் கொடுமையைவிட மகா கொடுமை புரிகிறது மத்யசர்க்கார் என்று அங்கலாய்க்கின்றனர்.

இந்த நிலைமையில்தான், மாகாண ப்பிரிவினை உணர்ச்சி ஓங்கியுள்ள நேரத்தில்தான் நாம் ஒன்றிய திராவிடம் கேட்கிறோம். திராவிடநாட்டு அமைப்பைப் பற்றி பேசுகிறோம்; அங்கங்கள் எவை என்று கூறுகிறோம். நாம் கேட்கும் நாட்டுப் பிரிவினைக்கும், மாகாணப்பிரிவினைக் கிளர்ச்சிக்கும் வேறுபாடு உண்டு. நமது கொள்கைக்கு ஆதாரவாகவே பல பேராசிரியர்கள், பல அரசியல்வாதிகள், பொருளாதார வல்லுநர்கள் தென்னிந்திய பெடரேஷன் அவசியத்தைப பற்றி வலியுறுத்துகின்றனர். பெயர்மாற்றமே ஒழிய கருத்து ஒன்றுதான். இன்றையநிலையில் தென்னிந்தியா பெடரேஷன் அதாவது திராவிட பெடரேஷன் அமைப்பது சாத்யமே சாத்யமட்டுமல்ல அவசியமுங்கூட. அப்போதுதான் தென்னிந்தியாவிலுள்ள பல அரிய பெரிய சாதனங்கள் பயன்பட வழியுண்டு; மூலப்பொருள்கள் பல முடங்கிக் கிடக்கின்றன. ஆறுகள் வாய்க்கால்கள் பண்படுத்தப் படாமல், மின்சார சக்தியை வளர்க்கும் வகைக்கு ஏற்ற வழியில் திருத்தப்படாமல் இருக்கின்றன. உணவுப் பொருள் விருத்தியும் தேங்கிவிட்டது. இவைகளையெல்லாம், வீணாக, கவனிப்பாரற்ற, மத்ய சர்க்காரின் மாற்றாந்தாயின் கவனிப்பில் வாடும் நமது செல்வத்தை வளர்க்க (தென்னிந்திய) திராவிட தனிநாடு தேவை.

நாம் திராவிடம் கேட்கும் இந்த நேரத்தில் மொழிவாரி மாகாணப் பிரிவினை கமிஷன் ஏற்படுத்தி அதற்கான பூர்வாங்கமான வேலைகளையும் தொடங்கப் போகிறார்கள். மகிழ்ச்சிக்குரிய செய்திதான். ஆனால் அந்த முயற்சியால் என்ன நிரந்தரமான பலன் காணப்போகிறோம் என்பதுதான் பிரச்னை. மொழிவாரி மாகாணங்களை அமைத்துவிட்டால், ஓரளவிற்கு பிரிவினை உணர்ச்சியை மட்டுப்படுத்திவிடலாம் என்பதாக அரசியல்

சூதாடிகள் எண்ணலாம்; எண்ணி பலம் பொருந்திய மத்யசர்க்காரை அமைத்துவிடலாம் என்பதாக பெருமிதம் அடையலாம்—இந்த நிலையில் இன்னொரு திடீர் தாக்குதல் கிளம்புகிறது ஐக்கிய மாகாணத்திலிருந்து. "மாகாண நிதி விஷயங்களில மத்ய சர்க்கார் அளவுகடந்த ஆதிக்கம் செலுத்துகிறது. அதனல், மாகாணங்களுக்கு வேண்டிய அளவிற்கு, தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளவேண்டிய அளவிற்குக் கூட நிதி கிடைக்கவில்லை. பசையுள்ள பல வரிகளை மாகாணங்களில் மத்தியசர்க்கார் வசூலித்துவிடும் வகையில் இந்திய அரசியல் நகல் தீட்டப்பட்டுள்ளது; இது நீதியாகாது; முறையாகாது; எலலா மாகாணங்களும் ஒருங்கு கூடி ஆவன செய்ய முற்பட வேண்டும்" என்ற செய்தி ஐக்கிய மாகாண அரசாங்கம் எல்லா மாகாணங்களையும் உதவிக்கழைத்திருக்கும் நிலையை நன்கு தெரிவிக்கிறது. உள்ளபடியே இந்தச்செய்தி பலம் பொருந்திய மத்ய சர்க்கார் கோரும் பிரகஸ்பதிகளுக்குப் பயத்தைக் கூட கொடுத்திருக்கலாம். ஏனெனில மாகாணங்கள் ஒன்றி மத்யசர்க்காரை மிரட்டினல் பிறகு பலம் பொருந்தியதாகவோ, எதேச்சாதிகாரமாகவோ இருக்கமுடியாது. அதுமட்டுமல்ல, பலமற்ற ஐக்கிய இந்தியாவாக இருந்தால தேசிய மொழியாக—ராஷ்டிர பாஷையாக—ஹிந்திபாஷையோ ஹிந்துஸ்தானியையோ, கொண்டுவரமுடியாது. ஏனெனில், நிதி விஷயமாக எதிர்க்கத் துணிந்துவிட்ட மாகாணங்கள், மொழி பற்றியும் தகராறு கிளப்பலாம் என்ற எண்ணமும் ஏற்படலாம்.

மேலும் இந்தியாவின் பல பகுதிகளிலும் ஓர்வித அதிர்ப்தியும் வளர்ந்து வருவதையும் காணலாம். தொழில் வளர்ச்சியும் மத்யசர்க்கார் பம்பாய் மாகாணப் பிரமுகர்களுடன் கூடிக் குலாவுவதும், அரசாங்க உத்தியோகங்களில் குறிப்பிட்ட சிலருக்கு வழங்கப்படும் அநீதியையும் நாம் அறிகிறோம். மத்ய சர்க்காருக்கும் மாகாண சர்க்கார்களுக்கும் தவிர்க்க முடியாத பிளவு ஏற்பட்டு வருவதையும் காண்கிறோம். ஏற்படாத இடங்களிலும் ஆரம்பிப்பதையும் காண்கிறோம். இவ்வாறு பல வழிகளிலும், மத்தியிலுள்ளவர்கள் தங்களைப் பலப்படுத்த முயற்சிப்பதும், மாகாணங்கள் தங்கள் உரிமைகளைப் பெற பாடுபடுவதையும் காணும் நமக்கு—தென்னாட்டு திராவிடர்களுக்கு—நமது நாடு தனி நாடாகவேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை இருக்கக் கூடாது; இருந்தாலும் அதை அழித்துவிட வேண்டும்.

நமது கிளர்ச்சியை போராட்டத்தை, அவமதிப்பவர்கள் ஒன்று நம்மைப்பற்றி நன்கு அறியாதவர்களாக இருக்க வேண்டும் அல்லது குறும்புத்தனத்தில் இறங்கியவர்களாக இருக்கவேண்டும்—பாகிஸ்தானில், பட்டாணிஸ்தான் வேண்டுமென முழக்கமிட்ட கபார்கானை ஆதரித்தவர்கள்; கீழ்வங்காளத்தில் வங்காள மொழி அரசியல் மொழியாக வேண்டும் என்பதை அழுத்தந் திருத்தமாக கூறிய தேசிய தோழர்கள் நமது கோரிக்கையை எதிர்க்கும் காரணமென்ன? அவர்களது ஜொலிக்கும் வாழ்வு மங்கிவிடுமா? எதேச்சாதிகாரம் குறைந்து விடுமா? அதிகார போதை தெளிந்து விடுமென்ற பயமா? அல்லது என்னைக்குமே பொருளாதார முறையிலும் நல்லவகையில் செழுமையாக வாழ வசதியுள்ள தென்னிந்தியாவை-திராவிடத்தை அடிமையாக வைத்திருக்க வேண்டுமென்ற ஏகாதிபத்ய மனப்பான்மையா? ஏன் அவர்கள் நமது வாழ்வு பூப்பதை மறக்கவேண்டும். இந்திய பூபாகத்தை அடிமைகொண்டு அதிகார வெறியில் ஆண்ட வெள்ளையனை விரட்டியதாக பெருமை பேசும் நமது அன்பர்கள் அறிய வேண்டாமா? ஆதிக்கமோ, ஆணவமோ, போலீசோ, பட்டாளங்களோ, பத்திரிகை பலமோ, நிரந்தரமானதல்ல என்பதை அறிந்தும் ஏன் இந்த பிடிவாதம்? ஆணவக்காரர்களின் பிடிவாதத்தை நொறுக்க, மாகாணம் பூரண சுதந்தரத்துடன் வாழ, தேவையில்லாத இந்தி நுழையாமலிருக்க, நமது செல்வத்தை நாம் அனுபவிக்க, பிர்லாவோ, டாடாவோ, பஜாஜோ, தேசிய போர்வையில் வளர்க்கும் இரும்பு முதலாளித்துவத்தை முறியடித்து சமத்துவ வழி வகுக்க, நாமார்க்கும் குடியல்லோம் என்ற வீரமுழக்கம் செய்ய ஜூலை 1-ந் தேதியை திராவிடர் அனைவரும் ஞாபகத்திலிருத்துங்கள்.

மக்கள் ஒன்றுபட்டு விட்டால், அரசாங்கபீடம் அதிர முழக்கம் கிளம்பினல், என்ன செய்ய முடியும் ஆட்சியாளர்கள்? ஆகவே, திராவிடமக்களே, நமது பிரதிநிதியான திராவிட கழகம் மேற்கொண்டுள்ள வேலையில், லட்சியத்தில், நம்பிக்கை கொண்டு தலைவர் பெரியார், தளபதி அண்ணு ஆகியோர் திட்டங்களைநடைமுறையில் ஏற்று செயலிலிறங்கினல் நிச்சயம் சுதந்தர ஜூலையைவிரைவில் கொண்டாடலாம். வடவர் ஆதிக்கம் ஒழிய, இந்த நாட்டு ஆரிய அக்ரமம் ஒழிய நமது பிரச்னைகளை முன்னிறுத்தி ஜூலை 1-ஐ கொண்டாடுங்கள். ★

புதுமைக் காதலர்கள்!

(5-ம் பக்க தொடர்ச்சி)

"அவளது சிங்காரச் சிரிப்பும் ...அன்ன நடையும்...துவளும் இடையும்...வசீகரிக்கும் குணமும்...ஆஹா அவளிடம் நான் அடிமையாக...." நீட்டலானான்.

நான் மறித்து "சரி வெளியே போ...நான் தூங்கவேண்டும்" என்றதும்தான் "கேட்காமல் பதஷ்டப்படுகிறாயே, மின்னலிடைமினுக்கி, சீதமொழியழகி"

"ஆமாம், ஒட்டகக் கழுத்து அழகி......சரி உனக்கு என்னமோ பித்தம் பிடித்துவிட்டது. ஆசை கண்களை மறைக்கின்றது," என அலுத்துக்கொண்டேன் கோபமாக.

"சுந்தரம்! அடுத்த வீதியில் நிற்கிறாள் வந்துபார்! அவளை எங்காவது தங்க ஏற்பாடுசெய்ய வேண்டும். அவளுக்கு உபகாரமாக இருக்கும்" என்றான் கருணா. "என், உனக்கு அபகாரமாக இருக்குமோ!" என கேலிசெய்தான்.

"இல்லை சுந்தரம்! இதில் உன்போல் அவ்வளவு அனுபவம் இல்லைபாரு..." என என்னையே கிண்டல் செய்தான்.

"சரி போதும்..! கிளியை எந்த கழுகாவது அடித்துக்கொண்டு போய்விடப்போகிறது ...வா, போகலாம்" என கருணா கரத்தைப்பிடித்து இழுத்துக்கொண்டு விரைந்தேன்,

வழியில் நான் "எப்படி அப்பா நீ இதில்....";

"சரி சரி! உன் கேலியை ஆரம்பித்து விட்டாய். நண்பனை துணைக்கு அழைத்தால், நீயே இப்படி..." என இழுத்தான்.

இதற்குள் அவள் நிற்குமிடம் வந்தடைந்தோம். "சுந்தரம் சற்று நில், அதோ மரத்தினடியில் அந்த தங்கவிக்ரகம்..நான் அழைத்து வருகிறேன்" என்று சொல்லி அவளிடம் கருணா நெருங்கினான். கருணா ஏதோ அவள் காதில் சொல்லி என்னிடம் வந்து 'எங்கே தங்கப் போகலாம்?...என்றான்.

நான் "மங்கள லாட்ஜ்"போகலாம் அங்கே நம் போன்றவர்கட்கு நல்ல வசதிசெய்து கொடுப்பார்கள்" என்றேன்.

"சரி, நீ சற்று முன் நட" என கூறி அவர்கள் இருவரும் என்னை தொடர்ந்தார்கள். நான் யாரும் அரவம் இல்லாத ஆற்றங்கரை வழியே அழைத்துச்சென்றேன். நிலவொளி ஆற்று நீரில் பட்டு அழகை அள்ளி அள்ளி வீசிக்கொண்டிருந்தது.

எனக்கு ஓர் சந்தேகம் தோன்ற "கருணா பணம் கையில் இருக்குல்ல?" என திரும்பி மெல்லிய குரலில் கேட்டேன். "இரண்டு ரூபாய்தான் இருக்கு......" என்றான்.

"சரி வா, பார்த்துக் கொள்ளலாம்..." என முடிப்பதற்குள் 'சலுக்' கென்ற ஓசை கேட்க, நான் அந்த திக்கில என் 'டார்ச்'சை அடித்துத் தேடிப்பார்த்தேன். கடைசியாக ஓர் நெருப்புப் பெட்டி, அதற்குள் பற்றி அணைந்த அரை பீடித்துண்டு இருக்கக்கண்டேன். நான் கையில் எடுததுக்கொண்டு "இது எங்கிருந்து விழுந்தது?" என்று கேட்டுக்கொண்டே கருணா பக்கம் திரும்பினேன். இதுபோது அவன் பக்கத்தில் நின்ற மாது தனது இடுப்பில் எதையோ காணமல் தேடிக்கொண்டிருந்தாள்.

"ஏதாவது ஓழே....." என அவளை நோக்கி கேட்டேன்.

"ஒன்றுமில்லை...ஹி..ஹி......" அசட்டுச் சிரிப்பு சிரித்து தன் முக்காட்டை சரிப்படுத்திக்கொண்டாள். எனக்கு சந்தேகம் அதிகரிக்கவே "ஏன் விழிக்கின்றாய்?" என்றேன்.

"ஒன்றுமில்லை......" என்ற கனத்த குரல் கேட்டது. 'டார்ச்' ஒளி கையை தாவிற்று, பின் முகத்திற்கு தாவிற்று, விளக்கு நழுவிற்று "பளீர்" என்ற பேரொலி கிளம்பிற்று.

"சுந்தரம்! என்னப்பா இது..என்ன?" என நடுங்கும் குரலில் கேட்டான் கருணா.

"என்னை காப்பாத்துங்க சாமி, இனி இந்த வேலையில் ஈடுபடமாட்டேன்..." என அலறியபடி ஓடலானாள் அந்த கோமளவல்லி! அவள் கூச்சல் வானைமுட்டித் திரும்பி ஆற்று நீரில் வீழ்ந்து, கலந்தோடிற்று. பாவம், அவளும் ஓடிக்கொண்டு தானிருந்தாள்.

* * *

பின் நான் "கருணா வா போகலாம்!" என புறப்பட்டேன். "என்ன காரியம்செய்துவிட்டாய். ஏன் ஓடுகிறாள். காரியத்தை கெடுத்துவிட்டாயே, பாவம் பெண். கிடைத்தற்கரிய தேனமிர்ததை நழுவவிடலாமா? அப்போதே நீ என்னை தடுத்திருக்கலாம் உன்னை நான அழைத்து வருவேனா? இத்தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கமாட்டாள்" என கலங்கினான்,

"தம்பி! பதறாதே. அவள் இச்சையை நிறைவேற்ற வந்த பெண் அல்ல. ஓர் பைசாசம். **அவள் ஓர் அலி**" என்றேன்.

"அப்படினா!" என ஆச்சரியத்துடன் பார்த்தான் என்னை.

"பெண் ரூபத்தில் வந்த பேடிப்பயல், தெரிந்ததா? இனியாவது கண்டதும் யாரிடத்தும் காதல் கொள்ளாதே!" என்றதும் கருணாவுக்கு வெட்கம் தலையை நாணச்செய்தது, ஒன்றுமே பேசவில்லை.

* * *

பின் நானும் கருணாவும் திரும்பிவரும்போது "என் கருணா? எப்படி அந்த காதலியை பெற்றாய்?" என்று கேட்டேன். முதலில் கோபமும் வெட்கமும் கலந்த குரலில் "சரிதான் போ!" என அலட்சியமாக கூறினான். பின் வீடு வந்ததும்தான முதல் கதையை இப்போது சொன்ன கதையுடன் கொண்டுவந்து சேர்த்தான் நடராஜ் என நண்பனிடம் சொன்னேன். நடராஜ் வயிறு புண்ணாகிவிட்டது சிரித்தது.

இவை மட்டுமல்ல நடராஜ் "ஆற்றங்கரைக் காதல் சொல்லட்டுமா?" என்று சொன்னீயோ, அவன் 'பாக்கட்' பணம் ஹோட்டல் அய்யர் மேஜை டிராயரில் குடியேறிவிடும். சரி வரட்டுமா சோமாசு, நாளை கட்டாயம் பீச்சுக்கு வா" என சொல்லி சுந்தரம் வீட்டுக்கு நடந்தான்.

★

தேவர்—ராஜா—மந்திரி

அண்மையில் திராவிடம் மூவரைப் பிரிந்து அகம்நொந்துளது

திருச்சி தீரர் ரத்தினவேலு தேவர், வள்ளல் ராஜா சர், அண்ணாமலை செட்டியார், மதுவிலக்கு மந்திரி டேனியல் தாமஸ் இம்மூவரின் மறைவு குறித்து நமது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

பலசரக்கு மூட்டை.

ஆசிரியர், குத்தூசி.

விலை: 0—8—0

கிடைக்குமிடம்: விடுதலை சென்னை.

வைதீகக் கோணிகளைக் குத்தி, அரசியல் சாக்கு மூட்டைகளை ஆராய்ச்சி செய்து, பலசரக்குகளை நமக்குத் தந்திருக்கிறார் தோழர் 'கு' அவர்கள். குத்தூசியார் எவ்வளவு நாளைக்குத்தான் பெயரை மறைத்துக் கொண்டிருக்கிறாரோ பார்ப்போம் "குத்தூசி அண்ணாச்சி! .... உங்களை நான் கண்டுபிடித்து விட்டேன் ஆனால் அந்த உருத்த பருப்பும், உருப்படா உளுந்தும் உங்களை யாரென்று தெரியாமல் விழிக்கின்றன" "திராவிடரே! உங்கள் கையில் ஒரு குத்தூசி இருக்கட்டு"மென சிபார்சு செய்கிறேன்.

போர்வாள்:

ஆசிரியர், C P. சிற்றரசு

விலை: 1—4—0

கிடைக்குமிடம்:

பொன் ராமலிங்கம், புதுவை,

திராவிடர் தம் உள்ளமெலாம் போர்வாளாக மாற தோழர் சிற்றரசு வீரநடை போட்டு வீசியுள்ள புரட்சிக்குவியல் போர்வாள். மாற்றப்படாத, மாற்றுக் குறையாத வசனங்களை சுவைக்க வேண்டுமாயின 'போர்வாள்' புத்தகத்தை படித்தாக வேண்டும். அது வீரவாள்! வெற்றிவாள்!.. வாழ்க ஆசிரியர் உள்ளம்.

விரைவில்

— திருவாரூரில் —

தூக்குமேடை

நாடகம்.

அவர்கள் தொடுக்கும் கணைகள்!



'போர்வாள்' நாடகத்திற்கு தடை!

'கறுப்பு சட்டைப் படை தடையுத்தரவு!

'இராவண காவிய பறிமுதல்!!!

'விடுதலை'க்கே — 2000 ரூபாய் ஜாமீன்!!!!

ஆச்சரியக்குறிகளை கேள்விக் குறிகளாக மாற்றிப் பாருங்களேன்; விடை கூற முடியாத நிலையிலேதானிருப்பர் விடுதலை வீரர்கள்.

பகுத்தறிவுப் புயல்!

ஆண்டவனைப் பற்றிய வாதங்களுக்கு ஆராய்ச்சி பூர்வமாக தர்க்கரீதியாக தணலன் எழுதிய நூல்.

கடவுள் முளைத்தார்!

விலை அணா 14.

வியாபாரிகட்கு 25% கழிவு உண்டு.

எரிமலைப் பதிப்பகம்,

துறையூர், திருச்சி Dt.

★ கம்பர் தரும் காட்சி! ★

பகவான் இராமபிரானுடையபக்திப் புராணத்தை எழுதவந்த ஜீவன்முக்தர் கம்பநாட்டாழ்வாரின் கம்ப ராமாயணத்திலே ரசமான பகுதிகள் பல கம்பர்தருங் காட்சியிலோ—கம்ப சித்திரத்திலோ இதுவரை இடம்பெறவில்லை. இக்குறையைத் தீர்த்து கம்பராமாயணச் செய்யுட்கள் பலவற்றை அடித்தல் திருத்தலின்றி அப்படியே தருகிறோம். பொருள் புரியவேண்டுமெனின் புலவர் பெருமக்களிடம் செல்க! இராவண காவியத்திற்கு தடைபோட்டோர் இந்த இராமாயணத்திற்கு தடைபோட மாட்டார் என நம்புகிறோம். ஏனெனில் இது கம்பர் பாடியது!.. சுவையுங்கள்.

பால காண்டம்

1. ஆற்றுப் படலம்.

ஆசலம்புரி யைம்பொறி வாளியும்
காசலம்பு முலையவர் கண்ணெனும்
பூசலம்பு நெறியின் புறஞ்செலாக்
கோசலம்புனை யாற்றணி கூறுவாம் 1

நீற ணிந்த கடவு ணிறத்தவான்
ஆறணிந்துசென் றர்கலி மேய்ந்தகிற்
சேறணிந்த முலைத்திரு மங்கைதன்
வீற ணிந்தவன் மேனியின் மீண்டதே 2

இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
வுரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம் 12

2. நாட்டுப் படலம்.

வேலை வென்ற முகத்தியர் வெம்முலை
ஆலை நின்று முனிந்திடு மங்கோர் பால்
பாலை தந்த மதுப்பரு கிப்பரு
வாலை நின்று மதர்க்கு மருங் கெலாம். 24

ஈர நீர்படிந் திந்நிலத் தேசிய
கார்க ளென்ன வருங்கரு மேதிகள்
ஊரி னின்றகன் றுள்ளிட வுண்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே. 25

இயல்புடை பெயர்வன மயின்மணி யிழையின்
வெயில்புடை பெயர்வன முலையவர் குழலபோற்
புயல்புடை பெயர்வன பொழிலவர் விழிபோற்
கயல்புடை பெயர்வன கடிகமழ் கழனி. 42

—தொடரும்

சுவைத்ததில்!

மஹாத்மா மாண்டது ஏன்?

ஆசிரியர்: கே. தங்கராசு.

விலை அணா 3.

தோழர், கே. தங்கராசு அவர்கள் வெதும்பிய உள்ளத்துடனே பேசிய பேச்சுக்களை வெளியிட்டுள்ளார்கள். அடுக்குச் சொற்கள் கொட்டிக்கிடக்கின்றன இச்சிறு நூலில்!

காந்தியாரின் புகழ் கூறவந்த தோழர், "ராமராஜ்யத்தை ஏற்படுத்துவேன் என்று கூறிய அடிகளின் கருத்து உண்மையிலேயே இந்நாட்டிலே ஒரு வர்ணாச்சிரம ராஜ்யத்தை ஏற்படுத்தி புராணம் போதிக்கும் புரோகித குலத்திலே சாணக்கிய வழிவந்த ஒரு சற்குருவின் தலைமையிலே பெயருக்காக ஒரு மன்னன் இருப்பான் அதுவும் பெரும்பாலும் அந்தப்புரத்திலே ஆசியர்களுடன்! ஆட்சி (மத) ஆதிக்க வெறியர்களிடமே இருக்கும், இதுவே அண்ணல் கேட்கும் ராமராஜ்யம் என நினைத்து வந்தனர் மதவெறியர்கள்" என்று எழுதியுள்ளார். இக்கருத்து காந்தியாரின் ராமராஜ்யத்தைக் குறைகூறிய நம்மைக் கண்டிப்பதுபோல் உள்ளது. தோழர் இதைத் திருத்திக்கொள்ள வேண்டும். ராமராஜ்யம் என்றால் செருப்பாண்ட ராஜ்யத்தை—சம்பூகனைக்கொன்ற ராஜ்யத்தைத் தான நம்மிடம் பெரியார் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

சுவைமிக்க
சிற்றுண்டிகளுக்கு
விஜயபுரம்
பீமவிலாஸ்

(2-ம் பக்க தொடர்ச்சி)

வெறுப்பது மாத்திரம் தேசாபிமானம் என்று அகராதி தயாரித்து, சமுதாயத்திலே தேள்களாய், பூரான்களாய், பாம்புக்குட்டிகளாய், மொசுக்கட்டாம் பூச்சிகளாய் வாழ்ந்து வளம் பெறுவதுதானே அது! இந்நாட்டான், இங்கு வாழ்வான். எந்நாட்டையும் புறங்காணும் வலிவுடைவீரன், பிறந்த பொன்னாட்டை மறந்து உம் வர்க்கம் காட்டிய வழியில் விழ்யோட்டி உமக்காக, உமது இனத்துக்காக உழைத்துச் சாவதுதானே நீர் கூறும் தேசாபிமானம். என் இனத்தான் சேரன்.... உம்மினத்தான் தலை கொறங்க கல் கொணர்ந்த காளை. மூவேந்தரில் ஒரு வேந்தன். அவன் நினைவுக்கு ஒரு சிலை இந்நாட்டில் இருத்தலாகாது என்பது இன உணர்ச்சியை அழிக்கும் விஷம். கலையுலகிற்குச் செய்யும் பெருத்த அநீதி" சிற்பியின் சீற்றம் வார்த்தைகளுக்கு சூடேற்றிற்று.

ஆச்சார்யா, "கன்றுகுட்டி துள்ளுகிறது" என்று மீண்டும் சிரித்தார் கேலியாக!......

வேல்விழி, சிற்பிக்கு புத்தி சொல்வதுபோல— ஞானச்சார்யாவின் பெருமையை எடுத்துரைத்து எச்சரிக்கை செய்வதுபோல—கூறினாள்;

"கலைஞரே!......ஆச்சார்யா சாமான்யமில்லை... ஜாக்கிரதை"

"தெரியும் உங்கள் ஆச்சார்யா தவளை என்று!"

"நீர் நினைப்பது தவறு...அவர் பாம்புக்குட்டி!"

"இருக்கட்டுமே... ..... இந்த சிற்பி ஒரு கீரிப்பிள்ளை யென்பதை அவருக்கு தெரியப்படுத்துங்கள்". வேல்விழியின் இதயத்தில இன்பத் தேன்வந்து பாய்ந்ததுபோல இருந்தது அவள் காதலனின் பதில். அந்த சுவையை மறைத்துக்கொண்டு கோபக்காரிபோல நின்றாள்.

"மறுமுறையும் சொல்கிறேன் வாயை அடக்கிப்பேசினால் ஆச்சாரியாவின் அன்பைப் பெறலாம் இல்லையேல்........"

"நான் உதைப்பெறவேண்டிய இடத்தில் பெற்றுவிட்டேன்..." தன் கன்னங்களில ஏற்பட்ட திடீர்சிகப்பை ஆச்சார்யா பார்த்துவிடுவார் என்ற அச்சத்தால் வேல்விழி முகத்தை திருப்பிக் கொண்டாள்.

ஆச்சார்யாவின் பேச்சில் தடிப்பு ஏறபட்டது

"மரியாதையாகப் பேசடா... மானங்கெட்டவனே!"

"மானம்!.....மானமென்றால் விலைகேட்கும்வம்சத்தில் வந்த நீ மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழும் மறவேந்தர் மாபினருக்கு மானங் கற்பிக்க வந்திருக்கிறாய்? .....மண்டை வீங்கிப் பேசாதே! ....பிறகு என்னுடைய கரங்கள் உன்னோடு பேச ஆரம்பித்துவிடும்."

"நான் யார் தெரியுமா?.."

"தெரியும்..... ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்ட பெருச்சாளி! .....புலிவேஷம் போடும் பூனை!.........."

"பொன்னழகா!...பாண்டிய நாட்டு சர்வாதிகாரி நான். படைவீரர் என்பக்கம். பட்டக்காரசன் என் காலடியில்..அறிந்துகொண்டு பேசு"

"நான் அறியவேண்டிய அவசியமில்லை ..... இதோ... உனது காலடியில் கிடக்கும் பட்டத்தரசனுடைய தங்கை! அறியவேண்டியது அவர்கள்!"

"நான் நினைத்தால்...உன்னை ...."

சாக அடிக்கலாம்......"

"சாவுக்குத் துணிந்தவனை..."

"உனது வம்சத்தில் கண்டிருக்கமாட்டாய்"

"இனி பேச்சில்லை ..ஏய்!..." வீரர் இருவர் விலங்கேந்தியபடி "சுவாமி" என்றனர்.

"இந்த மடையன்...கையில் மாட்டுங்கள்"

பொன்னழகன் விலங்குகளுக்குள் கையை நீட்டினான். அவன் முகம் வீர மெருகேறிக் காணப்பட்டதே தவிர விலங்கென்றதும் வெலவெலத்துப் போய்விடவில்லை. அந்த விலங்கை அவன் ஒரு சாதாரண இரும்புச் சங்கிலி என்று கருதினான். ஆச்சார்யாவின் கரங்களில் மின்னிக்கொண்டிருந்த வைரமிழைத்த தங்கத தோடாக்களுக்கும் தன் கைகளில் மாட்டப்பட்ட விலங்குக்கும் உலோக வகையைத் தவிர வேறு வித்தியாச மிருப்பதாக சிற்பி நினைக்கவில்லை. மாணிக்கத்தாலும், கோமேதகத்தாலும், முத்துக்களாலும், அணிகள் செய்து அணிவிக்க வேண்டிய அந்தக் கலைஞனின் கரத்தில் ஒருகபட நாடகக்காரன் இரும்பு சங்கிலிகளை பூட்டிக் களித்தான்.

வார்த்தை ஜாலங்களால் விடுதலை பெறலாம் என எண்ணிய வேல்விழி தன் முயற்சி பலிக்காமல் தன் தந்திரமே-ஆச்சார்யாவுக்குக் காரணமானது கண்டு வெதும்பினாள்! அந்தச் சமயத்தில் அவள் கண்களிலிருந்து ஒரு துளி நீர் கசிந்து விட்டால்கூட அது அவள் வாழ்வுமாளிகையை மூழ்க அடிக்கவந்த வெள்ளமாக மாறிவிடும். வாயடைத்து மரமாக நின்றாள்.

வீட்டுப்படிகளிலிருந்து இறங்கிச் செல்லும் சிற்பியின் கைவிலங்குகளின் சப்தம், அவள் காதுகளில் இடியோசைகளாக விழுந்தன. ஆச்சார்யா பல்லக்கில் ஏறிக்கொண்டார்.-(தொடரும்)

1-ம் பக்கத் தொடர்ச்சி

லாக்காசாக்குகிறேன்'' எனக்கு முறும் ஒரு பொறுமை உருவம்.

''நான் உன்போல் புகழில் கெளியும் பூச்சியல்லவே. நீ என் புகழுக்குத தோண்டும் குழி உன்னையும் உன்போன்ற சதைக் குன்றுகளையும் விழுங்கி ஜீரணித்து என் அழியாதபுகழுக்கு அஸ்திவாரமும் அமைக்கும்'' என்று வீரமுழக்கம் செய்வான்.

இதோ பாரப்பா........மாட மாளிகை, மாகதக் குவியல், மனதிற்கேற்ற உல்லாசபுரி, இங்கே வந்தால் மல்லிகையில் படுக்கலாம், வெல்வெட்டுக் கப்பளத்தில நடக்கலாம், என்ற மோக வலை வீசப்படும். துறவியைப் போல பேசி தூர கிற்பான். இலட்சிய வாதி.

காயமே இது பொய்யடா—காற்றடைத்த பையடா என்ற 'நீர்மேற்குமிழி பஜனை' நடத்திக் காட்டப்படும்.

கண்மூடிகளிடம் காட்டப்பா உன் கைவரிசையை எனக்கேலி செய்வான் எச்சரிக்கை—அபாய அறிவிப்பு—உடனடி நடவடிக்கை —பாகு மொழி—பாசாங்கு வலை இத்தனை உருவங்களில் அழிவு அவனை அண்ட வருகிறது.

ஆனால் அந்த இலட்சிய வீரன் தன் பாதையிலேயே போகிறான்—போகிறான்—போய்க் கொண்டே இருக்கிறான்.

★

முக்கிய அறிவிப்பு

27—6—48-க்குள் பட்டியல் பாக்கி அனுப்பிவைக்காத விற்பனையாளருக்கு பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்படுவதோடு அதிக பாக்கி வைத்துள்ள விற்பனையாளர்களின் பெயர் முரசொலியில் வெளியிட நேரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

விசயபுரம்

செல்வம் சிற்றுண்டி உணவு நிலையம்.

தேனீர் விருந்துகளுக்கும்,
உயரிய சிற்றுண்டிகளுக்கும் உகந்த இடம்.

P. அய்யாசாமி, நிர்வாகி. A. முத்துகிருட்டினன், உரித்தாளர்.

பட்டுக்கோட்டை தாலுகாவில்

திராவிடர் கழக பொதுக் கூட்டங்கள்.

தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் பிரச்சாரக்குழு தோழர்கள் N. S. இளங்கோ சென்னை, R. ஜார்ஜ், நாகை-இராதாமணாளன், K. தங்கராசு, செங்குட்டுவன், V.S.P. யாகூப், N. B. காளியப்பன், D. V. டேவிஸ் ஆகியவர்கள் இததாலுக்காவில் அடியிற்கண்ட ஊர்களில் மாலை 5 மணிக்கு நடைபெறும் பொதுக்கூட்டங்களில் பேசுவார்கள்.

19—6—48 ஆலடிக்குமினே, 20, ஒரத்தநாடு, 21, பெருமாள் கோவில், 22, பண்ணவயல், 23, அணைக்காடு, 24, நாராண்டி, 25, சேதுபாவாசத்திரம், 26, ராஜாமடம், 27, அதிராம்பட்டணம், 28, சூரப்பள்ளம், 29, நாட்டுச்சாலை, 30, மதுக்கூர், 1—7—48 பட்டுக்கோட்டை என தோழர், ப. மாப்பிள்ளையன் அறிவிக்கிறார்.

திருமண அழைப்பு

அன்புடையீர்! 27—6—48 ஞாயிறு காலை 9 மணியளவில் தளபதி K. V. அழகாசாமி அவர்கள் தலைமையிலும், மு. கருணாநிதி, N. S. இளங்கோ அவர்கள் முன்னிலையிலும் எனது சகோதரன் B. இராதாகிருட்டினனுக்கும், மகாராசபுரம V. கோவிந்தராஜுலு மகள் திருமதி சுப்புலக்ஷிமிக்கும் அதிராம்பட்டணம பழஞ்செட்டித் தெரு எனது இல்லத்தில் நடைபெற இருக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழாவில் தாங்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

B. கோவிந்தராஜுலு, மளிகை.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: மு. கருணாநிதி, திருவாரூர்.

அச்சிடுபவர்: கருணை. எம். ஜமால், கருணாநிதி [மின்னியக்க] அச்சகம், விஜயபுரம்.